# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10.* Ph. 0452 – 4354302

# இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை

(அதன் அடையாளங்கள், அதன் மகிமை, அதன் வல்லமை, அவருடைய அதிசயமான ஆயிரவருட அரசாட்சி

**முன்னுரை:**

நீங்கள் இந்த வேதாகம அஞ்சல்வழிப் பாடத்தை முழுமையாகப் படிக்கவேண்டும் என்று தீர்மானித்து, இப்பொழுது இந்தக் கடைசி பாடத்தைப் படிக்க ஆரம்பித்திருந்தால், உங்களுடைய இந்த முயற்சிக்காக உங்களை வாழ்த்துகிறோம். வேதாகமத்தில் 35 சத்தியங்களைக் கற்றதின் மூலம் வேதாகமத்தில் அடங்கியுள்ள காரியங்களைப் பற்றிய ஓரளவு ஞானத்தைப் பெற்றிருப்பீர்கள் என்று நம்புகிறோம்.

இயேசுகிறிஸ்துவின் வல்லமையும் மாட்சிமையும் பொருந்திய இரண்டாம் வருகையைப் பற்றிய பாடத்தைத் தவிர வேறு எந்தப்பொருளும் முடிவுரையாக இருக்கமுடியாது என்று எண்ணுகிறோம். பாடம் 9–ல் இயேசுகிறிஸ்து சபையை எடுத்துக்கொள்ள வரும் இரகசிய வருகைக்கும், இரண்டாம் வருகைக்கும் உள்ள திட்டவட்டமான பன்னிரண்டு வேற்றுமைகளைக் கொடுத்துள்ளோம். அவைகளை நீங்கள் விரும்பினால் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

பாடம் 35–ல் இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு முன்னதாக நிகழக்கூடிய நிகழ்ச்சிகளை விவரித்துள்ளோம். இந்தப் பாடத்தில் இயேசுகிறிஸ்து ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் திரும்பிவந்து இந்த பூமியை அரசாளப் போவதைப்பற்றிக் கூறியுள்ளோம். அவர் வருகைக்கு முன்னால் நிகழக்கூடிய ஆரம்ப அறிகுறிகளைப் பற்றியும் குறிப்பிட்டு, அவருடைய அதிசயமான ஆயிரவருட அரசாட்சியின் உண்மைகளைப் பற்றியும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

## இந்தப் பாடத்தின் முக்கியத்துவம் :

கர்த்தர் தமது நித்தியமான திட்டத்தின்படி செயல்படுகிறார் என்பதை வேதாகமம் போதிக்கின்றது. திருச்சபைக்கும், இஸ்ரவேலருக்கும், இந்த உலகத்திற்குமாக அவர் ஓர் திட்டம் வைத்துள்ளார்.

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையானது கர்த்தருடைய திட்டத்தின் முக்கிய பங்காக இருக்கிறது. ஏற்கனவே நாம் படித்துள்ளபடி ஆபிரகாமுக்கு, பாலஸ்தீனாவிற்கும், தாவீதுக்கும் அவர் அளித்த வாக்குத்தத்தங்களையும், விசுவாசிகளுக்கு அளித்துள்ள புதிய உடன்படிக்கையையும் நிறைவேற்றவே இயேசுகிறிஸ்து மீண்டும் வருகிறார்.

வேதாகமத்தைப் பற்றிய அறிவிலும், நம்முடைய விசுவாசத்திலும் இதை உணர்ந்து கொண்டுள்ளோமா என்பதே முக்கியமாகும். வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளவை யாவும் உண்மையானது. அவை எழுத்தின்படி நிறைவேறும் என்று நம்ப வேண்டும். வேதத்தில் எழுதப்பட்டுள்ளபடி இயேசுகிறிஸ்து மறுபடியும் வந்து, எழுதப்பட்டபடி அவர் தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து அரசாளுவார். எழுதப்பட்டபடி அவர் பூமியை ஆயிரம் வருடம் அரசாளுவார்.

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையானது பல அடையாளங்களோடு சம்பந்தப்பட்டுள்ளது. அவைகள் எவை என்பதை அறிந்துகொள்வது முக்கியமாகும். இந்த அடையாளங்கள் ஏற்கனவே நிறைவேறி இருக்குமாயின், அவருடைய இரகசிய வருகை மிகவும் சமீபம் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். மேலும் இப்படிப்பட்ட உன்னத நிகழ்ச்சியில் சபையானது எங்கு இருக்கும் என்பதை நாம் அறிந்துகொள்வது அவசியமாகும்.

## I. இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் அடையாளங்கள் :

இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகை தவிர்க்க முடியாத ஒன்றாகும். அது அடையாளங்களுடன் தொடர்புடையது இல்லாவிட்டாலும் இயேசுகிறிஸ்து பூமிக்கு வருமுன்னதாக நடக்கப்போகும் எண்ணிறந்த அடையாளங்கள் வேதப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டு உள்ளன. இயேசுகிறிஸ்துவும், “இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால் நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்” என்று கூறினார் (லூக்கா 21:25–28). இந்த வார்த்தைகள் இஸ்ரவேலரைக் குறித்துக் சொல்லப்பட்டதாயினும், இக்காலத்தில் இப்படிப்பட்ட அடையாளங்கள் நிறைவேற ஆரம்பித்திருப்பதை நாம் காண்கிறோம் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

**அ. இஸ்ரவேல் தேசம் திரும்பவும் உருவாக்கப்பட்டு ஒரு தனி நாடாக நிறுவப்படுதலும், பழைய எருசலேம் நகரம் மீட்டுக்கொள்ளப்படுதலும் :**

எசேக்கியேல் 36:8–10,24,28; 37:21.22; லூக்கா 21:14.

1. 1917–ல் இங்கிலாந்தில் பால்ஃபோர் உடன்படிக்கையின்படி யூதர்களுக்கு பாலஸ்தீனம் சொந்தநாடாக வழங்கப்பட்டது (உண்மையாகவே வெகுகாலத்திற்கு முன்பே நம்முடைய கர்த்தர் இப்படிப்பட்ட திட்டத்தை வழங்கிவிட்டார்).
2. மீண்டும் 1948, மே மாதம் 4–ஆம் நாள் இஸ்ரவேல் ஒரு தனி நாடாகியது.
3. 1967, ஜூன் மாதம் 8–ஆம் நாள் பழைய எருசலேம் திரும்பவும் பிடிக்கப்பட்டு யூதரின் கையில் கிடைத்தது. இப்பொழுது அது இஸ்ரவேல் நாட்டின் தலைநகரமாக விளங்குகிறது.

**குறிப்பு :**

லூக்கா 24:21 கி.மு. 604–ல் நேபுகாத்நேச்சார் எருசலேமைப் பிடித்தபொழுது புறஜாதியாரின் காலம் ஆரம்பித்தது. இந்த 'காலம்' நிறைவேறும் வரை எருசலேம் புறஜாதியாரின் ஆளுகையில் இருக்க வேண்டும். இப்பொழுது 2500 ஆண்டுகளுக்குப் பின் முதன் முறையாக எருசலேம் யூதருடைய ஆளுகையின் கீழ் வந்துள்ளது. தீர்க்கதரிசனங்கள் மெதுவாகச் சுழன்று கொண்டிருந்தாலும், புறஜாதியாரின் காலம் நிறைவேறி கொண்டே இருக்கிறதை நாம் காணமுடிகிறது.

**ஆ. உலக யுத்தங்களும், தற்கால போர்க்கருவிகளின் உற்பத்திகளும் :**

1. இவ்வுலகில் ஆரம்பநாட்களிருலிந்தே யுத்தம் உலகநிதழ்ச்சிகளில் நிகழ்ந்து வந்தாலும், உலகின் கடைசி நாட்களை, உலக அளவிலான போராட்டங்களும், குழப்பங்களும் நிறைந்த காலங்களாகக் கருதலாம் (மத்தேயு 24:6,7).
2. இதுவரை நாம் இரண்டு யுத்தங்களை இந்த நூற்றாண்டிலேயே பார்த்து விட்டோம். தற்போது இவ்வுலகம் மூன்றாவது யுத்தத்திற்குத் தயக்கத்துடன் தயாராகிக் கொண்டிருக்கிறது. அது அர்மகெதோன் யுத்தமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.
3. கடைசி நாட்களில் சம்பவிக்கப்போகும் கொடூரமாமன போர்த்தள வாடங்களின் உற்பத்திப் போட்டியைப் பற்றி யோவேல் தீர்க்கதரிசி கூறியிருக்கிறார் (யோவேல் 3:9–12). உலகில் இன்று ஒவ்வொரு வருடமும் 600 பில்லியன் டாலர் (1 பில்லியன் = 1 லட்சம் கோடி) போராயுதங்களுக்காக செலவிடப்படுகின்றது. ஒவ்வொரு நிமிடமும் 1.3 மில்லியன் டாலர் செலவிடப்படுகின்றது (1 மில்லியன் = பத்துஇலட்சம்). வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்டுள்ள அழிவு ஆயுதங்களான அணு ஆயுதங்களை நம்முடைய தலைமுறையிலேயே காணக்கூடியவர்களாக இருக்கிறோம்.

**இ. நிலநடுக்கங்கள் : (மத்தேயு 24:7)**

உலக சரித்திரத்திலேயே பதிவாகாத அளவுக்கு நிலநடுக்கங்கள் இந்த நூற்றாண்டிலேயே பதிவாகியுள்ளன. நிலநடுக்கங்கள் தொடர்ந்து அதிகரிக்கும் என்பதையும் மிகப்பெரிய நிலநடுக்கங்களும் தவிர்க்க முடியாதவைகளாகும் என்பதையும் விஞ்ஞானிகள் ஒப்புக்கொள்கின்றனர். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது மிகப்பெரிய நிலநடுக்கத்தை இந்த உலகம் அனுபவிக்கப்போகிறது என்பதை வேதாகமத்தின் மூலம் அறியலாம் (வெளி. 16:17,18; சகரியா 14:4,5).

**ஈ. உலகளவிலான பஞ்சம் : (மத்தேயு 24:7)**

வெளிப்படுத்தல் 6:1–6ல் பஞ்சத்தின் அறிகுறியான கருப்புக்குதிரையும், சர்வாதிகாரத்தின் அறிகுறியான வெள்ளைக்குதிரையும், யுத்தத்தின் அறிகுறியான சிவப்புக்குதிரையும் தொடர்ந்து வருகிறதை வாசிக்கிறோம். உலகிலுள்ள மக்கள் தொகையில் ஒரு இலட்சம் கோடி மக்கள் (1 பில்லியன்) போதிய ஊட்டச்சத்து உணவில்லாமலும், பட்டினியிலும் இருக்கிறார்கள். தினமும் 30,000 பேர் பட்டினியால் மரிக்கிறார்கள். அடுத்த பத்து வருடத்தில் ஒரு இலட்சம் கோடி மக்கள் (1 பில்லியன்) பட்டினியால் இறப்பார்கள் என்று உலக சபை ஊழியர் அறிக்கை கூறுகின்றது. இப்பொழுதே பஞ்சக்காலம் ஆரம்பித்துள்ளதை நாம் காண்கிறோம்.

**உ. மனிதனின் கீழ்நோக்கிப்போகும் நடக்கையும், கலகங்களின் பெருக்கமும் :**

(ஆதியாகமம் 6:5,11,12; 2 தீமோத்தேயு 3:1–5; லூக்கா 17:26–30).

அமெரிக்காவில் துன்மார்க்கமான செய்கைகள் நாட்டின் ஜனத்தொகைப் பெருக்கத்தைவிட 11 மடங்கு வேகமாக வளருகிறது. ஒவ்வொருநாளும் 70–க்கும் மேற்பட்ட கொலைகளும் 240 வன்முறைக் கற்பழிப்புகளும், 450 ஆயுதம் தாங்கிய கொள்ளைகளும் நடக்கின்றது என்று அசோசியேட்டட் அச்சகத்தின் செய்திக்குறிப்பு கூறுகின்றது. பொய் சொல்லுவதும், ஏமாற்றுவதும், திருடுவதும் சாதாரண நிகழ்ச்சிகளாகிவிட்டன.

ஒரு வருடத்திற்கு 5 கோடி இலட்சம் டாலர் மதிப்புள்ள பொருள் ஈட்டக்கூடிய பெரிய தொழிலாக ஆபாச எழுத்துக்களும், படங்களும் உற்பத்தியாகின்றன.

கடைசி நாட்களில் மனிதர்கள் எப்டிப்பட்டட மோசமான குணங்களை உடையவர்களாக இருப்பார்கள் என்பதைப் பற்றிய பட்டியலைப் பவுல் அப்போஸ்தலர் எழுதி இருப்பதை வாசித்து, இதில் நீங்கள் அனுதினமும் கண்கூடாகக் காணும் நிகழ்ச்சிகளைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். நோவாவின் காலத்தில் நடந்தது போல மனுஷ குமாரனின் நாட்களிலும் (இயேசுகிறிஸ்துவின் வருகையின் நாட்களில்) நடக்கும் என்று இயேசுகிறிஸ்துவே கூறியிருப்பதை உணரலாம். கலகங்களும், வன்முறைகளும், ஒழுக்கநெறியற்ற காரியங்களும், லஞ்சமும், சட்டத்தை மீறுவதுமான காரியங்கள் இந்நாட்களில் நடந்து வருவதை சாதாரணமாகக் காண்கிறோம்.

**ஊ. கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளப்போதகர்களும் கடைசி காலத்தில் தோன்றுவார்கள் :**

**(1 தீமோத்தேயு 4:1; 2 பேதுரு 2:1)**

சத்திய வேதத்திற்கு எதிரான காரியங்களைப் போதிக்கக்கூடிய **5000** சபைகள் அமெரிக்காவில் இயங்கி வருகின்றன. உலகத்தில் **56%** மக்கள் இயேசு கிறிஸ்துவின் கன்னிப்பிறப்பை நம்புவதில்லை என்றும், **71%** மக்கள் மரணத்திற்குப் பின் ஒரு வாழ்வு உண்டு என்பதை நம்புவதில்லை என்றும், **98%** மக்கள் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை வேதவாக்கியத்தின்படி இருக்கும் என்பதை நம்புவதில்லை என்றும் வேதகலாசாலையில் ஊழியத்திற்கென்று பயின்றுவரும் மாணவர்கள் கணக்கெடுத்துள்ளனர். கள்ளப்போதகம் எங்கும் பரவி வருகிறதை நாம் காணலாம்.

**எ. இதற்கு முக்கியமான அடையாளங்கள் :**

1. பூமியிலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும், இடுக்கணும் உண்டாகும் (லூக்கா **21:25**). இப்பொழுது உலக முழுவதும் குழப்பங்களும், ஆட்சிமாற்றங்களும் நேரிடுவதை நாம் காணமுடிகிறது.
2. ரஷ்யாவின் படைப்பல எழுச்சியும், அந்நாட்டுக்கு இஸ்ரவேலில் ஏற்பட்ட படுதோல்வியும் (எசேக்கியேல் **38,39** அதிகாரங்கள்).
3. ரோம ஆட்சியின் மறுமலர்ச்சி, தானியேல் **2:43–45; 7:23,24;** வெளி.**13:1; 17:12** இந்த பாகங்களைக் கவனமாகப் படித்துப் பாருங்கள். பத்து நாடுகளுக்குத் தலைமையாக மிருகம் இருக்கும். இன்று ஐரோப்பாவின் பொது அங்காடியில் பத்து நாடுகள் இணைந்துள்ளன. இந்நாடுகள் ரோமஅரசின் கொள்கைகளை உயிர்பிக்கும் ஒரு கூட்டமைப்பாகவே இருக்கும்.
4. பொது அறிவுப்பெருக்கமும், பயணப்பெருக்கமும் (தானியேல் **12:4**).

**<u>குறிப்பு :</u>**

வேறு பல அடையாளங்களும் உள்ளன, இவைகளை நன்றாக அறிந்துகொள்ளுங்கள். இயேசுகிறிஸ்து மகிமையுடன் வரப்போகிறார் என்றும், உலகத்தின் கடைசிநாட்கள் வெகுவிரைவில் நெருங்கிக் கொண்டிருக்கின்றன என்றும் நாம் உணர்ந்துகொள்ள மேற்கண்ட அடையாளங்களே போதுமானவை.

## II. மாட்சிமை பொருந்திய வல்லமையான கிறிஸ்துவின் வருகை :

பழைய ஏற்பாட்டுக்கால தீர்க்கதரிசிகள் இயேசுகிறிஸ்துவின் பாடுகளைப்பற்றியும், அவைகளுக்குப் பின்வரும் மகிமையைப்பற்றியும் முன்னறிவித்தார்கள் (**1** பேதுரு **1:11**). ஆனால் இயேசுகிறிஸ்து சபையைச் சேர்த்துகொள்வதற்காக வரும் இரகசிய வருகையைப்பற்றி அறியவில்லை. அவர் மகிமையுடன் பூமிக்கு வருவதையே கண்டார்கள்.

**அ. மகிமை :**

1. இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நடக்கப்போகும் பல சிறப்பான, அற்புதமான நிகழ்ச்சிகளின் மூலம் அவருடைய மகிமை வெளிப்படும்.

i) மத்தேயு **24:27–31**

மின்னல் கிழக்கிலிருந்து மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல் மனுஷகுமாரனின் வருகையும் இருக்கும். சூரியனும், சந்திரனும் அந்தகாரப்படும். நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும். எக்காள சத்தத்துடன் தூதர்கள் வருவார்கள். மனுஷகுமாரன் (இயேசுகிறிஸ்து) வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருவார்.

ii) **2** தெசலோனிக்கேயர் **1:7–10**

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது வல்லமையின் தூதரோடும் (மத்தேயு **25:31**) ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வெளிப்படுவார். தமது மகிமையின் வல்லமையினால் பாவிகளை தண்டித்து, நித்திய ஆக்கினையை அடையும்படிச் செய்வார்.

iii) வெளிப்படுத்தின விசேஷம் 19:11–15

- ❖ பரலோகம் திறக்கப்பட்டது.
- ❖ அவர் பூமியை நியாயந்தீர்க்கவும், பூமியில் யுத்தத்தை உண்டுபண்ணவும் வெள்ளைக்குதிரையின் மேல் வருகிறார்.
- ❖ அவருடைய நாமம் உண்மையும், சத்தியமும் ஆகும்.
- ❖ அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம் பண்ணுவார்.
- ❖ அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப் போலிருந்தன.
- ❖ அவருடைய தலையில் அநேக கிரீடங்கள் இருந்தன.
- ❖ அவருடைய வஸ்திரம் இரத்தத்தில் தோய்க்கப்பட்டதாக இருந்தது.
- ❖ அவர் தேவனுடைய வார்த்தை என்று அழைக்கப்பட்டார்.
- ❖ பரலோகத்தின் சேனைகள் வெண்மையும், சுத்தமான வஸ்திரந்தரித்தவர்களாய், வெள்ளைக் குதிரையின் மேல் ஏறி அவருக்குப் பின் சென்றார்கள்.
- ❖ புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்பட்டது.
- ❖ அவருடைய நாமம் ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்பதே.

2. இயேசுகிறிஸ்து ‘‘மகிமையின் ராஜா’’ என்று அழைக்கப்பட்டார் (சங்கீதம் 24:7–10).
3. அவர் தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய் வருவார் (மாற்கு 8:38).
4. இயேசுகிறிஸ்து மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் வருகிறதைப் பூமியிலுள்ளவர்கள் காண்பார்கள் ( லூக்கா 21:27).
5. இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்களில் மகிமைப்படும்படி வருகிறார் (2 தெசலோனிக்கேயர் 1:9; கொலோசெயர் 3:4; யூதா 15).
6. இயேசுகிறிஸ்து மகிமையும், கனத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராக இருக்கிறார் (வெளி. 4:11; 5:12).

**குறிப்பு :**

இயேசுகிறிஸ்துவின் மகிமை அவர் மூலமாகச் சகலவற்றிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது (அதாவது அவர் பிறப்பு, வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல், இரண்டாம் வருகை இவற்றின் மூலம் வெளிப்படுகிறது). பிதாவாகிய தேவனும் அவரில் மகிமைப்படுகிறார் (யோவான் 13:31; 14:13).

**ஆ. அவருடைய வருகையின் வல்லமை :**

1. இயேசுகிறிஸ்து சபைக்காக வரும் **இரகசிய வருகையில்** அவருடைய வல்லமை தெளிவாக விளங்குகிறது.

   i) மரணத்தை வென்று நம்மை அதன் பிடியிலிருந்து விடுவிக்க வல்லவர் (1 தெசலோனிக்கேயர் 4:15–17; 1 கொரிந்தியர் 15:50–57; யோவான் 5:25).

   ii) அழிவுக்குரிய நம்முடைய சரீரத்தை புதிய மகிமையுள்ள சரீரமாக மாற்ற வல்லவர் (பிலிப்பியர் 3:20,21; 1 கொரிந்தியர் 15:51; 1 யோவான் 3:2).

   iii) புவிஈர்ப்பு விதியை மாற்றி நம் புதிய சரீரத்துடன் மோட்சத்திற்கு ஏறிச் செல்ல நமக்கு உதவுகிறார் (1 தெசலோனிக்கேயர் 4:15–17; யோவான் 14:3).

   iv) கிறிஸ்துவுக்குள் மரித்த இலட்சக்கணக்கான விசுவாசிகள் ஒரே நேரத்தில் மரணத்தின் பிடியிலிருந்து விடுதலையடைந்து உயிரோடு எழுப்பப்படுவார்கள் (1 தெசலோனிக்கேயர் 4:16).

2. இயேசுகிறிஸ்து மகிமையுடன் **பூமிக்கு வரும்போது** அவருடைய வல்லமை பிரமிக்கத்தக்கதாகவும் அளவிட முடியாததாகவும். முழுமை யானதாகவும் இருக்கும்.

   i) இயேசுகிறிஸ்துவிற்கு எதிராக படைதிரட்டி வரும் எல்லா நாடுகளின் சேனைகளையும் அவர் அழிக்கும் வல்லமை உடையவராக இருப்பார் (வெளி. 19:15–19).

**குறிப்பு :**

தானியேலில் கூறப்பட்டுள்ள நொறுக்கிப்போடுகின்ற கல் இயேசுகிறிஸ்துவே ஆகும் (தானியேல் 2:34, 35,46; சகரியா 12:9; 14:2). இவ்விதமாக அவர் உலகத்திலுள்ள சகல புறஜாதியாரின் சக்திகளையும் அழித்துபோடுவார் (சங்கீதம் 2:8,9).

ii) அந்திக்கிறிஸ்துவாகிய மிருகத்தையும் அதன் கள்ளத்தீர்க்கதரிசியையும் வென்று எரிகிற அக்கினிக் கடலாகிய பாதாளத்தில் தள்ளிப்போட வல்லவர் (வெளி. 19:19,20).

**குறிப்பு :**

இந்த வேளையில் சாத்தான் கட்டப்பட்டு, ஆயிரம் வருடமளவும் பாதாளத்தில் தள்ளப்பட்டு இருந்தான் (வெளி. 20:1–3).

iii) உலகம் முழுவதும் உள்ள இஸ்ரவேலரைக் கூட்டிச்சேர்த்து, அவர்களை ஒரு ஜாதியாக்கி, அவர்கள் உபாகமம் 30:5,6; ரோமர் 11: 25–27; எரேமியா 23:6).

iv) தாவீதின் சிங்காசனத்தில் தன்னை இராஜாவாக ஏற்படுத்திக்கொள்ள வல்லவர் (லூக்கா 1:32,33; அப்போஸ்தலர் 15:14–16; சகரியா 14:9; வெளிப்படுத்தின விசேஷம் 19:15; எரேமியா 23:5,6; 33:14–17).

v) அவர் வரும்போது அவரோடுள்ள சகல பரிசுத்தவான்களையும் தம்முடன் பூமிக்கு அழைத்துக் கொண்டு வருவார். அவர்கள் அவருடன் பூமியை ஆயிரம் வருடம் அரசாளுவார்கள் (வெளி. 19:14; 5:10; 20:4,6; யூதா 14,15). (ஏற்கனவே எடுத்துக்கொள்ளப்பட்ட சபையும் இதில் அடங்கும்).

vi) அவர் தம்முடைய வல்லமையினால் நீதியும், சமாதானமும் நிறைந்த ஒரு இராஜ்யத்தை ஸ்தாபிப்பார் (ஏசாயா 9:6,7; சகரியா 14:9). இயேசு கிறிஸ்துவே எல்லா ராஜ்யங்களையும் அரசாளுவார் (வெளி. 19:15).

## III. இயேசுகிறிஸ்துவின் ஆயிரவருட ஆளுகை :

ஏற்கனவே நாம் கற்றுள்ளபடி தாவீதுடன் தேவன் செய்துகொண்ட உடன்படிக்கையானது, தாவீதின் சிங்காசனம் நிலையானது என்று உறுதிப்படுத்துகிறது, தாவீதுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமானது இயேசுகிறிஸ்துவின் மூலம் நிறைவேறுகிறது. அதாவது தாவீதினுடைய நீதியின் கிளையாக இயேசுகிறிஸ்து எருசலேமில் தாவீதின் சிங்காசனத்தில் இருந்து இஸ்ரவேலரையும், பூமியின் அனைத்து இராஜ்யங்களையும் ஆயிரம் வருடம் அரசாளுவார் என்று வேதாகமம் தெளிவாக விளக்கிக்கூறுகிறது (அப்போஸ்தலர் 15:16; லூக்கா 1:32,33; எரேமியா 23:5; 33:15–17).

**குறிப்பு :**

வேதவசனங்களை எழுத்தின்படி எடுத்துக்கொண்டால், இயேசுகிறிஸ்துவின் ஆயிரவருட ஆளுகை உண்டென்றும், அதைத்தொடர்ந்து கிறிஸ்துவே ஆளுகை செய்வார் என்றும் உறுதியாக நம்பலாம்.

### அ. 1000 வருட ஆளுகையின் உண்மைகள் :

1. வெளி. 20: 1–10 வரை வாசிக்கவும்.
2. ஆயிரவருட ஆளுகையின்போது ஜனங்களை மோசம் போக்காதபடி சாத்தான் பிடிக்கப்பட்டு சங்கிலியால் கட்டப்பட்டு பாதாளத்திலே தள்ளப்பட்டு முத்திரை போடப்பட்டான் (வெளி. .20:1–3).
3. பரிசுத்தவான்களும் கிறிஸ்துவுடன் சேர்ந்து ஆயிரம் வருடம் அரசாளுவார்கள் (வெளி. 20:4–6; 5:10).

**குறிப்பு :**

ஆயிரம் வருட அரசாட்சிக்கு முன்னதாகவே சபையானது இயேசுகிறிஸ்துவினண்டைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதில் சந்தேகமில்லை (1 தெசலோனிக்கேயர் 4:15–18). இயேசுகிறிஸ்து பூமிக்குத் திரும்ப வரும் பொழுது அவர்களும் (பரிசுத்தவான்களும்) மகிமையுள்ள சரீரத்துடன் அவரோடுகூட வந்து அவருடன் ஆளுகை செய்வார்கள் (யூதா 14,15; வெளி. 19:14; 20:4).

4. முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குகொண்ட எல்லாரும், வானமேகத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட சபையும் (1 தெசலோனிக்கேயர் 4:16), உபத்திரவக்காலத்தில் இரத்தசாட்சியாய் மரித்தவர்களும், மிருகத்தையாவது அதன் சொரூபத்தையாவது வணங்காமலும் அதன் முத்திரையைத் தரித்துக்கொள்ளாதவர்களும் கிறிஸ்துவுடன் சேர்ந்து ஆயிரவருடம் அரசாளுவார்கள் (வெளி. 20:4–6).
5. ஆயிரம் ஆண்டுக்குப் பின் சாத்தான் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்படுவான். அப்பொழுது அவன் மீண்டும் மோசம் போக்க முயற்சிப்பான் (வெளி. 20:7). அநேகர் அவனைப் பின்பற்றுவார்கள். இந்த ஆயிரம் ஆண்டு ஆட்சியில் கிறிஸ்துவை எல்லாரும் விரும்பி ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்கு இது ஒரு அத்தாட்சி ஆகும்.
6. இயேசுகிறிஸ்துவிற்கு எதிராக யுத்தம் செய்யப் புறப்பட்ட அனைவரும் வானத்திலிருந்து இறங்கும் அக்கினியால் பட்சிக்கப்படுவார்கள். சாத்தான் அக்கினிக்கடலில் தள்ளப்படுவான் (வெளி. 20:9, 10).

### ஆ. ஆயிரம் ஆண்டு ஆட்சியின் நம்பிக்கை :

1. ஆயிரம் ஆண்டு ஆட்சியில் இஸ்ரவேலர் புறஜாதிகளுக்கு ஓர் ஆசீர்வாதமாக இருப்பார்கள் (சகரியா 8:13, 21–23).

2. இயேசுகிறிஸ்துவின் ஆளுகை உலகமுழுவதும் இருக்கும் (சகரியா 14:9; தானியேல் 2:35; (சிலையை மோதின கல் பூமியையெல்லாம் நிரப்பும்) ஏசாயா 11:9).

**இ. ஆயிரம் ஆண்டு ஆட்சியில் யார் இருப்பார்கள்?**

1. மீட்கப்பட்ட இஸ்ரவேலர்கள் (உபாகமம் 30:3–6; ரோமர் 11:26).
2. மீட்கப்பட்ட சபை (வெளி. 5:9,10).
3. பழைய ஏற்பாட்டுக்கால பரிசுத்தவான்கள் (தானியேல் 12:1–3).
4. மகா உபத்திரவ காலத்தில் சிரச்சேதம் பண்ணப்பட்ட பக்தர்கள் (வெளி. 7:9, 13,14; 20:4).
5. மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ள மறுத்தவர்கள் (வெளி. 20:4).
6. இஸ்ரவேலரை ஏற்றுக்கொண்டு அவர்களை பட்சமாய் நடப்பித்தவர்கள் (மத்தேயு 25:33–40).

**ஈ. ஆயிரம் ஆண்டு ஆட்சியின் தன்மை :**

1. இது வலுக்கட்டாயமாக புகுத்தப்படும் ஆட்சி (வெளி. 19:15).
2. வேதத்தில் எழுதப்பட்டுள்ளபடி ஆட்சி நிறுவப்படும் (ஏசாயா 9:6).
   i) இயேசுகிறிஸ்துவே அரசாளுவார் (ஏசாயா 9:7).
   ii) எருசலேமிலிருந்து அரசாளுவார் (ஏசாயா 2:3; மல்கியா 3:1–4).
   iii) யூதர்கள் கிறிஸ்துவின் அரசாட்சிக்கு ஒத்துழைப்பார்கள் (ஏசாயா 32:1; ஏசாயா 40:10).
   iv) பன்னிரண்டு அப்போஸ்தரும் இஸ்ரவேலரின் நியாயாதிபதிகளாக இருப்பார்கள் (மத்தேயு 19:28).
   v) பரிசுத்தவான்கள் (சபை) கிறிஸ்துவுடன் ஆட்சி புரிவார்கள் (வெளி. 5:9, 10).
3. கீழ்க்கண்ட வசனங்கள் ஆயிரம் ஆண்டு ஆட்சியைப்பற்றி என்ன கூறுகிறது என்பதைக் கவனியுங்கள்:
   i) ஏசாயா 2:1–4
      ❖ எல்லாருக்கும் கர்த்தருடைய வழி போதிக்கப்படும்.
      ❖ கிறிஸ்துவே நியாயாதிபதியாக இருப்பார்.
      ❖ இனிமேல் யுத்தம் என்பதே இருக்காது.
      ❖ எருசலேமிலிருந்து சட்டங்களும், வேதவசனமும் வெளிப்படும்.
   ii) ஏசாயா 9:6,7
      ❖ ராஜரீகம் அவர் தோளின்மேல் இருக்கும்.
      ❖ அவருடைய ஆட்சி நிலைத்திருக்கும்.
      ❖ சமாதானத்திற்கு முடிவில்லை.
      ❖ நீதியுடனும், நியாயத்துடனும் அவர் தமது ஆட்சியை ஸ்தபாபிப்பார்.
   iii) ஏசாயா 11:1–10
      ❖ சிறுமைப்பட்டவர்களும், ஏழைகளும் சமமாக எண்ணப்படுவார்கள் (வசனம் 4).
      ❖ மிருகத்தின் மூர்க்கத்தனம் முற்றிலுமாக ஒழிக்கப்படும் (வசனம் 6).
      ❖ பாம்புகள் ஒருவரையும் கடிக்காது (வசனம் 8).
      ❖ எதுவும் யாருக்கும் தீங்குசெய்யாது, அழிக்காது (வசனம் 9).
      ❖ பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும் (வசனம் 9).
   iv) ஏசாயா 65:18–25
      ❖ அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமும் எருசலேமில் இனி கேட்பதில்லை (வசனம் 18,19).
      ❖ அற்ப ஆயுசுள்ள பாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் அங்கு உண்டாயிருப்பதில்லை (வசனம் 20).
      ❖ ஏமாற்றுதலும், அநியாயமும், உண்மையற்ற தன்மையும் இருக்காது (வசனம் 22,23).
      ❖ ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ஒன்றாக உணவு உட்கொள்ளும் (வசனம் 5).
   v) ஏசாயா 66:12–14
      இஸ்ரவேலில் எங்கும் சமாதானம் நிலவும். அனைவரும் தேற்றப்படுவார்கள்.
   vi) ரோமர் 8:19–22
      பூமியின் மேலுள்ள சாபம் யாவும் நீக்கப்படும்.

vii) வெளி. 20:2
சாத்தான் கட்டப்பட்டிருப்பதால் ஏமாற்றங்களுக்கும், சோதனை களுக்கும் இடமிருக்காது.

viii) செப்பனியா 3:9
ஒருமனப்பட்டு கர்த்தரை தொழுதுகொள்வதற்காக ஜனங்களின் மொழி சுத்தமான மொழியாக மாற்றப்படும்.

**முடிவுரை :**

1. ஆயிரம் ஆண்டு ஆட்சியின் முடிவில் தேவன் பெரிய வெள்ளைச்சிங்காசனத்தில் வீற்றிருந்து எல்லாக்காலத்திலும் ஜீவித்த பாவிகளை (இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவ மன்னிப்புப் பெறாதவர்கள்) நியாயம் விசாரிப்பார் (வெளி. 20:11–15).
2. இதனைத் தொடர்ந்து உலகம் அழிந்துபோகும். புதிய வானமும் , புதிய பூமியும் சிருஷ்டிக்கப்படும் (2 பேதுரு 3:10–14; வெளி. 21:1).
3. ஆயிர வருட அரசாட்சி ஒரு நியாயத்தீர்ப்பில் ஆரம்பித்து மற்றொரு நியாயத்தீர்ப்பில் முடிகிறது என்பதை நினைத்துக் கொள்ளுங்கள்.

   i) ஆரம்பத்தில் ஜாதிகளின் நியாயத்தீர்ப்பு இருக்கும் (மத்தேயு 25:31–46).

   ii) முடிவில் வெள்ளை சிங்காசனத்தின் நியாயத்தீர்ப்பு இருக்கும் (வெளி. 20:11–15).

   **குறிப்பு :**

   வேதத்தில் என்ன எழுதப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளதோ அவைகளுக்கு அதிகமாகப் போதிக்கக்கூடாது என்று கடந்த வருடத்தில் கற்றிருக்கிறோம். வெளிப்படுத்தப்படாத அநேக இரகசியங்கள் உண்டு என்ன எழுதப் பட்டுள்ளதோ, எவைகள் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளனவோ அவை களைக் குறித்து மட்டும் மகிழ்ச்சி கொள்வோமாக. வெளிப்படுத்தப்படாத வைகளைக் குறித்து நாமே கற்பனை செய்யாமலிருப்பதே சிறந்த முறையாகும்.

   எங்களுடைய பாடங்களைக் கவனமாக படித்து வந்ததைப்பற்றி மகிழ்ச்சி அடைகிறோம். உங்களுடைய டிப்ளமோவை சீக்கிரத்தில் பெற்றுக் கொள்வீர்கள். இந்தப் பாடங்கள் உங்களுக்கு பயனுள்ளதாகவும். பலனளிக்கக்கூடியதாகவும் இருக்கும் என நம்புகிறோம். மேல்நோக்கிப் பார்த்துக் கொண்டிருங்கள். நம்முடைய இரட்சிப்பு சமீபமாக இருக்கிறது.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**(பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்)**

### சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்

1. இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக்குறித்து வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதைப் புரிந்து கொள்வது அவசியம் காரணம் ?

   a. ஆவிக்குரிய வளர்ச்சியை உண்டாக்குகிறது

   b. நமது விசுவாசத்தில் பெலமடையச் செய்கிறது

   c. தேவனை இன்னும் சிறப்பாக அறிந்து கொள்ள உதவுகிறது

2. சபை எடுத்துக்கொள்ளப்படுவது எப்பொழுது?

   a. எந்த நேரத்திலும் நடக்கலாம்

   b. அந்திக்கிறிஸ்து வெளிப்படும்பொழுது நடக்கும்

   c. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நடக்கும்

3. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான அடையாளம் என்ன?

   a. அரேபியர்கள் இஸ்ரவேலரோடு சமாதானம் உண்டாக்குகின்றனர்

   b.1948, மே 14 முதல் இஸ்ரவேல் ஒரு தேசமாக மாறிற்று

   c. 1967–ல் இஸ்ரவேலுக்கும் அருகில் இருந்த தேசத்திற்கும் நடந்த யுத்தம்

4. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் :

   a. சபை எடுத்துக்கொள்ளப்படுவதை பார்க்கவில்லை

   b. கிறிஸ்துவின் மகிமையான வருகையைப் பார்க்கவில்லை

   c. கிறிஸ்துவின் சிலுவை மரணத்தைப் பார்க்கவில்லை

5. கிறிஸ்துவின் மகிமை என்றால் என்ன?

   a. அவர் பிரகாசிக்கும் பெரிய சுடர்

   b. அவருக்கு அதிக வல்லமை உண்டு

   c. அவரும், அவருக்கு உரிய அனைத்தும் வெளிப்படுத்தப்படும்

6. கிறிஸ்துவின் வருகைக்குத் தொடர்புடைய **நான்கு** காரியங்களை வட்டமிடுக

   a. உலகத்திலிருந்து மறைக்கப்படும்

   b. வெள்ளைக் குதிரையில் வருவார்

   c. உண்மையும், சத்தியமும் என்ற பெயரைத் தரித்திருப்பார்

   d. அவர் வந்து கழுதையின் மேல் அமருவார்

   e. அவரது சிரசில் அநேக கிரீடங்கள் இருக்கும்

   f. தேவ வார்த்தை என்று அழைக்கப்படுவார்

   g. அக்கினியின் பட்டயம் அவரிடத்தில் இருக்கும்

**7.** பொருத்துக :- கிறிஸ்து தம்முடைய மகிமையில் வரும்பொழுது எப்படி தம்முடைய வல்லமையை வெளிப்படுத்துவார்? **(சரியான வசனத்தை வார்த்தைக்கு முன்பு எடுத்து எழுதவும்)**

| | | |
|---|---|---|
| ------------ | சமாதானம், நீதி நிறைந்த ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார் | a.வெளிப்படுத்தல் **19:15,19** |
| ------------ | தேசங்களின் இராணுவத்தை அழிப்பார் | b. எரேமியா **23:6** |
| ------------ | உலகத்தின் எல்லா இடத்திலிருந்தும் இஸ்ரவேலைக் கூட்டிச்சேர்ப்பார் | c. லூக்கா **1:32,33** |
| ------------ | தாவீதின் சிங்காசனத்தில் ராஜாவாக அமருவார் | d. ஏசாயா **9:6,7** |

**8.** ஆயிர வருட அரசாட்சியைக் குறித்து கீழே உள்ள வசனங்கள் சொல்வது என்ன?

| | | |
|---|---|---|
| ------------ | பூமியில் உள்ள சாபம் நீக்கப்படும் | a. ஏசாயா **9:6,7** |
| ------------ | ஒன்றும் அழிக்கப்படுவதில்லை | b. ஏசாயா **11:1–10** |
| ------------ | சுத்தமான பாஷையால் இந்த பூமி ஆசீர்வதிக்கப்படும் | c. ஏசாயா **65:18–25** |
| ------------ | சமாதானத்திற்கு முடிவே இருக்காது | d. ரோமர் **8:19–22** |
| ------------ | எருசலேமில் அழுகையும் கூக்குரலும் முடிவுக்கு வரும் | e. செப்பனியா **3:9** |

**9.** தாவீதுடன் உடன்படிக்கை கிறிஸ்துவைக்குறித்து எதை நிச்சயப்படுத்துகிறது?

a. தாவீதின் சிங்காசனம் தற்காலிகமானது

b. தாவீதின் சிங்காசனம் சாலமோனோடு முடிவடைகிறது

c. தாவீதின் சிங்காசனம் என்றும் நிலைத்திருக்கும்

**10.** கிறிஸ்து தாவீதுடன் உடன்படிக்கையை நிறைவேற்றுவார்

a. பூமிக்கு மகிமையோடு வருவதன் மூலம்

b. சிலுவையில் தம்முடைய மரணத்தின் மூலம்

c. ஆயிரம் வருடம் பூமியில் ஆளுகை செய்வதன் மூலம்

**11.** கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் சபை எவ்வாறு பங்கெடுக்கும்?

a. சபை எடுததுக்கொள்ளப்படுவதன் மூலம்

b. கிறிஸ்துவோடுகூட ஆளுகை செய்வதன் மூலம்

c. ஆட்டுக்குட்டியானவர் பாத்திரர் என்று பாடுவதன் மூலம்

**12.** முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கெடுக்கும் மக்கள் யார்?

a. மிருகத்தை வணங்காதவர்கள்

b. உபத்திரவக் காலத்தில் கடந்து சென்றவர்கள்

c. ஆயிர வருட அரசாட்சியில் பிறந்தவர்கள்

**13.** ஆயிர வருட அரசாட்சியின் காலம் எது?

a. 70 வருடம்

b. 7 வாரங்கள்

c. 1000 வருடம்

**14.** ஆயிர வருட அரசாட்சியின் முடிவில் :

a. அர்மெகதான் யுத்தம் நடக்கும்

b. லட்சக்கணக்கான மக்கள் சாத்தானைப் பின்பற்றுவார்கள்

c. சபை பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்

15. ஆயிர வருட அரசாட்சியின் முடிவில் நடக்கும் நியாயத்தீர்ப்பு :
    a. கிறிஸ்துவின் நியாயசனம்
    b. வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு
    c. தேசங்களின் நியாயத்தீர்ப்பு
16. வருங்கால காரியங்களைக் குறித்து போதித்தல், பிரசங்கித்தல் ஆகிய இரண்டில் காணப்படும் ஆபத்து என்ன?
    a. வேதாகமத்தில் எழுதப்பட்டிராத காரியங்களைச் சொல்ல முற்படலாம்
    b. தவறுதலாக வியாக்கியானம் கொடுக்கலாம்
    c. வேதாகமப் பகுதியின் அமைப்பிலிருந்து வாக்கியத்தை எடுத்துவிட முடியும்

---

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ____________________________________________

**முகவரி :** ____________________________________________

____________________________________________